LIBRARY
18 APR 1962
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, the 14th March 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Local Administration Council (Recommendations)

801 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கிழக்கண்ட கேள்விகளுககுப் பதிலளிப்பாரா—

(அ) நவம்பர் மாதத்தில் பெங்களூரில் நடந்த தல சுயாட்சி மன்றக் கூட்டத்தில் செய்யப்பட்ட சிபாரிசுகள் சர்க்காருக்குக் கிடைத்தனவா ?

(இ) அப்படியாயின், அதன் விபரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir.

(*b*) Two copies of the resolutio ns relating to non-panchayat and panchayat items passed at the Sixth Meeting of the Central Council of Local Self-Government held in November 1960 at Bangalore are placed in the Legislature Library for Members' reference

Panchayat Election (Thevarappanpatti)

* 802 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தாலூகா, அத்தூர் தொகுதி அய்யம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த ''தேவரப்பன் பட்டி'' பஞ்சாயத்து தேர்தலை நிறுத்தி வைக்கும்படி நாமினேஷன் தேதிக்கு முன் தினம் சர்க்கார் தந்தி மூலம் உத்திரவிட்டார்களா ?

(இ) தேர்தலை சீக்கிரம் நடத்த உத்திரவிடுமாறு கனம் முதல் அமைச்சர் அவர்களிடம், மேற்படி பஞ்சாயத்தைச் சேர்நத பொது மக்கள் நேரிலும், 1960-ம் வருஷம் செப்டம்பர் மீ 27-ம் தேதி எழுத்து மூலமாகவும் விண்ணப்பித்துக் கொண்டார்களா ?

(உ) அவைகளின் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir.

(*b*) In their petition, dated 7th September 1960, the residents of the Thevarappanpatti Panchayat have requested Government for the early conduct of elections to that panchayat.

(*c*) The elections to Thevarappanpatti Panchayat will be held after a decision is reached on the question of jurisdiction of the above panchayat which is now under consideration separately.

MR. SPEAKER : We shall postpone question No. 803 till the Hon. Minister for Industries comes.

Electricity charges (Ryots—North Arcot)

*804 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் மின்சார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளின் உபயோகத்திற்கான மின்சாரத்திற்கு வருடாந்திரக் குறைந்த கட்டணம் எத்தனை சதவிகிதம் வடஆற்காடு ஜில்லாவில் வசூலாகிறது ?

(இ) குடியாத்தம் தாலூகாவிலுள்ள ஸ்கீம்களுக்கு, ஸ்கீம்வாரியாக எத்தனை சதம் வசூல் செய்யப்படுகிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The attention of the Hon. Member is invited to the answer[a] placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : பத்து சதவிகிதம் வசூலாகக்கூடிய ஒரு திட்டத்திற்கு டாரிப் கிராண்ட் அடிப்படையிலே வசூல் செய்ய வேண்டுமென்ற விதி இருக்கிறதே. அந்த அடிப்படையிலே வசூலிக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதற்காக ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : டாரிப் கிராண்ட் அடிப்படையிலே வசூல் செய்யப்பட்டு விதிவிலக்கு கொடுக்கப்பட்டு அங்கங்கே ஸ்கீம் போட்டு அன்கனக்டட் மினிமம் சார்ஜ் ஏற்பட்டிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : குடியாத்தம் தாலூகாவில் சேத்துவண்டை, அம்மணாங்குப்பம் போன்ற இடங்களில் 10 சத விகிதத்திற்கு வசூலாகக்கூடிய நிலைமையில் மேற்படி டாரிப் கிராண்ட் அடிப்படையில் வசூலிக்கப்படுகிறதா ? இது போன்று 10 சத விகிதத்திற்குமேல் வசூலிக்கும் பிரதேசங்களில் டாரிப் கிராண்ட் அடிப்படையில் வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : ஒரு ஸ்கீம் பூர்த்தியாகி 10 சத விகிதத்திற்குமேல் வருமானம் எவ்வளவு என்று கவனித்து எடுத்துக்கொள்கிறார்கள். இதைத்தான் வசூல் செய்கிறார்கள். ஒரு கட்டுபடியான நிலைமை ஏற்பட்டால் இந்த அடிப்படையிலே வசூல் செய்கிறார்கள்.

SRI S. M. ANNAMALAI : இப்பொழுது முற்பட்ட பகுதி என்றும், பிற்பட்ட பகுதி என்றும், முற்பட்ட பகுதிக்கு 40 ரூபாய் விகிதமும் பிற்பட்ட பகுதிக்கு 35 ரூபாய் விகிதமும் வசூலிக்கிறார்கள். இந்த ஸ்டேட்மென்டில் பார்க்கும்போது வட ஆற்காடு மாவட்டம் முற்பட்ட பகுதியாக கருதப்பட்டு 40 சத விகிதம் வசூலிக்கிறார்கள். ஆனால் வட ஆற்காடு மாவட்டம் பொருளாதார அடிப்படையிலே மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கிறது. ஆகையால் இதைப் பிற்பட்ட பகுதியாகப் பிரித்து 35 ரூபாய் வசூலிக்கக் கூடாதா ?

THE HON. SRI V. RAMAIAH : பிற்பட்ட பகுதி முற்பட்ட பகுதி என்பது பொறுப்புள்ள குழு ஆராய்ச்சி செய்த பிறகுதான் ஏற்படுத்தப்பட்டது. இரண்டு நாளைக்கு முன்பு கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது கூட மின்சாரத்தை மனதில் கொண்டு பல பாகங்களில் தண்ணீர் இருப்பதினால் மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டுமென்றும், அதற்கு விசேஷ சலுகை காட்டி துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அப்படியிருக்கும்போது வட ஆற்காடு மாவட்டத்தை பிற்பட்ட பகுதி என்று சொன்னால் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். அங்கு வளமாக இருப்பதனால்தான் துரிதமாக மின்சாரம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று கனம் அங்கத்தினரே ஒப்புக்கொண்டார். தஞ்சை ஜில்லாவிற்கு அடுத்தபடியாக வட ஆற்காடு உணவு உற்பத்தி செய்கிறது என்று சொன்னார். வட ஆற்காடு பூராவும் முற்போக்கான பகுதி என்றுதான் சொல்லவேண்டும்.

---

a Printed as Appendix I on pages 432–433 infra.